# குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, கரூர்.

**முன்னிலை:-** திரு: எஸ்.பி.பரத்குமார், எம்.பி.ஏ.,எல்.எல்.எம்.,
நீதித்துறை நடுவர் எண்.1 கரூர்

தமிழ் பராபவ வருடம், ஆவணி மாதம் 10 ஆம் நாள்,
2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 27 ஆம் நாள், வியாழக்கிழமை,

## ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.40/2017

<table>
<tr><td>1.</td><td>Name of the court</td><td colspan="3">Judicial Magistrate No.1,Karur.</td></tr>
<tr><td>2.</td><td>Name of the Judge</td><td colspan="3">Thiru. S.P. Barathkumar, M.B.A., L.L.M.,</td></tr>
<tr><td>3.</td><td>Date of Judgment</td><td colspan="3">27.08.2026</td></tr>
<tr><td>4.</td><td>Case Number along with CNR Number</td><td colspan="3">CC 40/2017<br>CNR No. TNKR02-000266-2017</td></tr>
<tr><td>5.</td><td>Name of the Parties of the case</td><td colspan="3">Inspector of Police<br>Pasupathipalayam P.S.<br>/Vs/<br>Salim,<br>S/o Cikanthar</td></tr>
<tr><td>6.</td><td>Date of Occurrence</td><td colspan="3">03.10.2016</td></tr>
<tr><td>7.</td><td>Date of Complaint</td><td colspan="3">04.10.2016</td></tr>
<tr><td>8.</td><td>Date of Arrest if any and Remand</td><td colspan="3">05.10.2016</td></tr>
<tr><td>9.</td><td>Period of remand of the accused</td><td colspan="3">26.09.2022(Surrender)<br>06.06.2026(Surrender)</td></tr>
<tr><td>10.</td><td>Date of Release on bail</td><td colspan="3">இல்லை</td></tr>
<tr><td>11.</td><td>Date of Final report</td><td colspan="3">11.11.2016</td></tr>
<tr><td>12.</td><td>Date of Committal of the case to the Court of Session</td><td colspan="3">Nil</td></tr>
<tr><td>13.</td><td>Date of questioning of the accused U/s. 228, 240, 246 and 251 of Code of Criminal Procedure</td><td colspan="3">04.05.2017</td></tr>
<tr><td rowspan="2">14.</td><td rowspan="2">Date of examination in Chief and Cross examination of the witness</td><td>No. of. Witness</td><td>Chief</td><td>Cross</td></tr>
<tr><td>PW-1<br>PW-2<br>PW-3</td><td>31.10.2022<br>23.12.2022<br>03.02.2023</td><td>இல்லை<br>இல்லை<br>இல்லை</td></tr>
</table>

| | | | | |
|---|---|---|---|---|
| | | PW4 | 17.02.2023 | இல்லை |
| 15. | Date of filing of all miscellaneous petitions and their results including the results on challenge before Superior Courts except routine petitions like petition under section 317 of the Code | Nil | | |
| 16 | Date of examination of the accused U/s. 313 of the Code | 06.07.2026 | | |
| 17. | Details of abscondence of an accused and his appearance/production as the case may be | Nil | | |
| 18. | Grant of stay by Superior Courts and the results thereof | Nil | | |
| 19. | Date of Commencement of Trial | 12.03.2024 | | |
| 20. | Date of closure of Trial | 24.08.2026 | | |
| 21. | Date of Sentence or order | 27.08.2026 | | |
| 22. | Date of service of copy of judgment to the accused | 27.08.2026 | | |
| 23. | If any delay, give explanation | No | | |

இவ்வழக்கானது கடந்த 14.02.2017 ம் நாள் இந்நீதிமன்றக் கோப்பில் எடுக்கப்பட்டு, கடந்த 24.08.2026 ம் நாள் என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்து, அரசு தரப்பிற்காக அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை-2 கரூர் அவர்கள் ஆஜராகி எடுத்துரைத்தும், எதிரிதரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. A.கோபாலகிருஷ்ணன், B.A.,B.L., அவர்கள் ஆஜராகியும் இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து இன்று 27.08.2026 ம் நாள் இந்நீதிமன்றம் வழங்கும்,

| | |
|---|---|
| புகார்தாரர் | அரசுக்காக, காவல் ஆய்வாளர்,<br>பசுபதிபாளையம் காவல்நிலையம்,<br>கா. நி. கு. எண்.638/2016 |
| எதிரிகளின் பெயர் | சலீம்,<br>த/பெ சிக்கந்தர், |

| | |
|---|---|
| | நரிமேடு,<br>பிள்ளையார் கோவில் தெரு,<br>மதுரை மாவட்டம். |
| அரசு தரப்பில் எதிரிகள் மீது சாட்டப்பட்ட குற்றம் | U/s. 379 IPC |
| நீதிமன்றத்தால் எதிரி மீது சாட்டப்பட்ட குற்றம் | U/s. 379 IPC |
| எதிரியின் பதில் | குற்றவாளி அல்ல |
| நீதிபதியின் முடிவு | குற்றவாளி |
| அரசு கூடுதல் குற்ற வழக்கறிஞர் | செல்வி,முருகேஷ்வரி, |
| எதிரி தரப்பு வழக்கறிஞர் | A. கோபாலகிருஷ்ணன், |
| இருதரப்பு வாதம் கேட்கப்பட்ட நாள் | 24.08.2026 |
| தீர்ப்பு வழங்கப்பட்ட நாள் | 27.08.2026 |

## <u>தீர்ப்புரை</u>

கடந்த 03.10.2016 ம் தேதி இரவு 09.00 மணியளவில் இவ்வழக்கின் வாதி சீனிவாசன் என்பவர் திருச்சி பைபாஸ் ரோடு சுக்காலியூர் ரவுண்டானா அருகில் ஐவர் ராஜா என்ற பெயரில் உள்ள தனது பஞ்சர் கடைக்கு வெளியே வைத்திருந்த இவ்வழக்கின் வாதிக்கு சொந்தமான சொத்துக்களான சைனா லாரி டயர்-1, அப்பல்லோ லாரி டயர்-2, அப்பல்லோ அமர் லாரி டயர்-1, ரீபட்டன் டயர்-3 ஆக மொத்தம் 7 டயர்கள் மற்றும் 20 லாரி டியூப்களையும் இவ்வழக்கின் எதிரி சலீம் என்பவர் தனது சுயலாபம் அடையும் பொருட்டு திருடியுள்ளார். எனவே மேற்படி எதிரியின் செய்கையானது சட்டப்பிரிவு 379 இதசவின் கீழ் தண்டிக்கப்பட வேண்டிய குற்றம் புரிந்துள்ளார் என பசுபதிபாளையம் காவல் ஆய்வாளர் எதிரியின் மீது குற்ற எண்.638/2016 ல் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்கள்.

2) இவ்வழக்கு எதிரி நீதிமன்றத்தில் ஆஜரானதும், எதிரிக்கு கு.வி.மு.ச 207-ஆவது பிரிவின்படி வழங்கப்பட வேண்டிய அரசுதரப்பு வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் இலவசமாக வழங்கப்பட்டது.

3) எதிரியிடம் குற்றம் குறித்து வினவியபோது, பொய்வழக்கு, என்றார்கள். இவ்வழக்காவணங்களை ஆராய்ந்தும் இருதரப்பும் கேட்டும்

எதிரியின் மீது 379 இதசவின் கீழ் குற்றச்சாட்டு வனைந்து வாசித்து விளக்கிக் கூறி வினவியபோதும், எதிரி குற்றவாளி இல்லை என கூறினார். எனவே, இவ்வழக்கில் அரசுதரப்பு சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு விசாரணை தொடங்கியது.

4) இவ்வழக்கில் அரசுதரப்பில் அ.சா.1 மற்றும் அ.சா.4 வரையான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.9 வரையான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அரசு தரப்பு சான்று பொருள்கள் அ.சா.பொ.1 மற்றும் அ.சா.பொ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

<u>5) அரசுதரப்பு வழக்கின் சாராம்சம்:-</u>

i) **அ.சா.1** தனது முதல் விசாரணை சாட்சியத்தில், "நான் சின்னப்பநாயக்கன்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் பஞ்சர்கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். கடந்த 02.10.2016 ம் தேதியில் நான் திருச்சி சமயபுரம் கோவிலுக்கு கடையைப் பூட்டிவிட்டு போயிருந்தேன். 04.10.2016 ம் தேதியில் மதியம் நான் என் கடைக்கு வந்து பார்த்தபோது என் கடையிலிருந்த 7 லாரி டயர்களையும், 20 டியூப்களையும் காணவில்லை. நான் பக்கத்தில் இருப்பவர்களை விசாரித்தேன். பக்கத்தில் இருந்தவர்கள் பிவிஜி லாரி மேனேஜர் நான் கடையை காலி செய்வதாக சொல்லி ஒருவர் டயரை ஆம்னி வேனில் 03.10.2016 ம் தேதியில் ஏற்றிச்சென்றதாக சொன்னார். இது சம்பந்தமாக நான் பசுபதிபாளையம் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார்தான் நான் அளித்தது தான். **அந்த புகார் மனு அ.சா.ஆ.1.** பின் ஒருவாரம் கழித்து பசுபதிபாளையம் காவல்நிலையத்தில் இருந்து என் டயர் கிடைத்துவிட்டதாக தகவல் சொன்னார். நான் டயர்களை அடையாளம் காட்டினேன். ஆஜர் எதிரிதான் சலீம் அவர்தான் டயர்களை திருடியதாக காவல்நிலையத்தில் சொன்னார்கள். பின்னர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த டயர்களை நான் மனு செய்து புகைப்படம் எடுத்துக்கொண்டு சென்றேன். தற்போது காட்டப்படும் புகைப்படத்திலுள்ள டயர்கள் மற்றும் டியூப்கள் என் கடையில் திருடுபோனதுதான். அதை நான் நீதிமன்றத்தில் பெற்றுச்சென்றேன். **அந்த**

**புகைப்படத்திலுள்ள 7 டயர்கள் அ.சா.பொ.1. 20 டியூப்கள் அ.சா.பொ.2.** போலிசார் என்னை விசாரித்தனர்" என்று சாட்சியம் அளித்துள்ளார்.

ii) **அ.சா.2** தனது முதல் விசாரணை சாட்சியத்தில், "நான் ஆதிகிருஷ்ண மடம் கரூரில் குடியிருந்து வருகிறேன். நான் போட்டோகிராபராக வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வைமகசரிலுள்ள முதல் கையெழுத்து என்னுடையது. என்னுடன் ரகுராமன் என்பவர் சாட்சி கையெழுத்து செய்து கொடுத்தார். 04.10.2016 ம் தேதி மதியம் 01.00 மணியளவில் சுக்காலியூர் பைபாஸ் அருகே எனது நண்பர் பஞ்சர் கடை வைத்துள்ளார். அவருடைய கடையில் டயர் திருடுபோனது சம்பந்தமாக போலிசார் வந்து திருடுபோன கடையைப் பார்வையிட்டு வரைபடம் வரைந்தனர். சம்பவயிடத்தில் போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க பார்வைமகசரில் சாட்சி கையொப்பம் செய்து கொடுத்தேன். **அந்த பார்வைமகசர் அ.சா.ஆ.2**. போலிசார் என்னை விசாரித்தனர்"என்று சாட்சியம் அளித்துள்ளார்.

iii) **அ.சா.3** தனது முதல் விசாரணை சாட்சியத்தில், " நான் சம்பவ சமயத்தில் சுக்காலியூரில் குடியிருந்து தற்போது EB காலனியில் வசித்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல்வாக்குமூலத்திலுள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதுதான். என்னுடன் பாலசுப்பிரமணியம் என்பவர் கையெழுத்து செய்தார். கைப்பற்றுதல்மகசரிலுள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது. என்னுடன் பாலசுப்பிரமணியம் என்பவர் கையொப்பம் செய்தார். கடந்த 05.10.2014 ம் தேதி மதியம் சுமார் 03.30 மணியளவில் சுக்காலியூரில் இருந்தபோது கிழக்கிலிருந்து வந்த ஒரு ஆம்னி வாகனத்தை போலிசார் தேக்கி வாகனத்தை சோதனையிட்டனர். அப்போது அங்கிருந்தவர் சண்டையிட்டுக்கொண்டனர். போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க ஒப்புதல்வாக்குமூலத்திலும், கைப்பற்றுதல்மகசரிலும் கையொப்பம் செய்தேன். **அந்த ஒப்புதல்வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல்மகசரிலுள்ள கையொப்பம் முறையே அ.சா.ஆ.3 மற்றும் அ.சா.ஆ.4.** போலிசார் என்னை விசாரித்தனர்"என்று சாட்சியம் அளித்துள்ளார்.

iv) **அ.சா.4** தனது முதல் விசாரணை சாட்சியத்தில், "நான் தற்போது தாந்தோணிமலை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 04.10.2016ம் தேதி பசுபதிபாளையம் காவல்நிலையத்தில் 10.30 மணிக்கு உதவி ஆய்வாளராக நிலைய பொறுப்பில் இருந்தபோது பகல் 12.00 மணியளவில் சீனிவாசன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று நிலைய கு.எண்.638/16, ச.பி.379 இதசவின்படி வழக்கு பதிவு செய்தேன். **அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.5.** பின்னர் அன்றைய தினம் 13.00 மணியளவில் சம்பவயிடம் சென்று சாட்சிகள் சீனிவாசன், ரகுராமன் முன்னிலையில் சம்பவ இடத்தைப் பார்வையிட்டு பார்வை மகசர், மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **அந்த மாதிரி வரைபடம் அ.சா.ஆ.6.** பின்னர், சாட்சிகள் 1 முதல் 3 வரையிலான சாட்சிகளை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சம்பவம் உண்மையென தெரியவந்ததன் அடிப்படையில் எதிரியை தக்க புலன் வைத்து தேடி வந்ததில் 05.10.2016ம் தேதி மதியம் 15.15 மணிக்கு வெங்ககல்பட்டி அருகே வாகன தணிக்கையில் ஈடுபட்டிருந்தபோது அவ்வழியாக வந்த **TN** 57 **L** 6953 என்ற ஆம்னி வேனை மறித்தபோது நிற்காமல் சென்றதால் போலிஸ் பார்ட்டியுடன் வளைத்து பிடித்து சோதனை செய்தபோது ஆம்னி வேனை ஓட்டிவந்தவர் முன்னுக்குப்பின் முரணாக கூறி பிறகு தனது பெயர் சலீம் என்றும் ஆம்னி வாகனத்தில் லாரி டயர், டியூப்களை திருடி ஏற்றி வந்ததாகவும் சாட்சிகள் கருணாநிதி, பாலசுப்பிரமணியம் என்பவர்கள் முன்னிலையில் தானாக முன்வந்து ஒரு ஒப்புதல்வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல்வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதியான "நான் திருடி வச்சிருந்த டயரையும், டியூப்பையும் திருடப் பயன்படுத்திய ஆம்னி காரையும் உங்ககிட்ட ஒப்படச்சேன். என்ன கூட்டிட்டு போனிங்கனா அன்னைக்கு நான் டயர் டியூப் திருடின இடத்தை அடையாளம் காட்டுகிறேன்" என்ற பகுதியான **அந்த ஒப்புதல்வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.7**. அந்த ஒப்புதல்வாக்குமூலத்தின் படி டயர், டியூப் மற்றும் ஆம்னி காரையும் ஆஜர்படுத்தியதை அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல்மகசரில் கைப்பற்றினேன். **அந்த கைப்பற்றுதல்மகசர் அ.சா.ஆ.8**. பின்னர் நிலையம் கொண்டு வந்து எதிரியை தக்க வழிக்காவல் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். புகார்தாரர் சீனிவாசனை மறுவிசாரணை செய்து வாக்குமூலம்

பதிவு செய்தேன். புகாரில் 4 டயர் மட்டும் காணாமல் போயிருந்ததாக சொல்லியிருந்தார். எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட 7 டயர் மற்றும் 20 லாரி டியூப்களை கைப்பற்றியது குறித்து விசாரித்தபோது புகார்தாரர் சீனிவாசன் பதற்றத்தில் நான்கு டயர்கள் காணாமல்போனதாக கூறியதால் மறு வாக்குமூலம் பதிவு செய்தேன். கைப்பற்றிய டயர்கள் மற்றும் டியூப்களையும் திருடுவதற்கு பயன்படுத்திய ஆம்னிவேனையும் படிவம் 91ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். **அந்த படிவம் 91 அ.சா.ஆ.9.** பின்னர் கருணாநிதி, பாலசுப்பிரமணியம் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இத்துடன் எனது புலன் விசாரணையை முடித்து எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்"என்று சாட்சியம் அளித்துள்ளார். இத்துடன் அரசு தரப்பு சாட்சிகளின் விசாரணை முடிக்கப்பட்டது.

6) அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிக்குப் பாதகமான சங்கதிகள் குறித்து கு.வி.மு.ச.313(1)(ஆ).ஆவது பிரிவின் கீழ் எடுத்துக் கூறி வினவியபோது எதிரி அவற்றை பொய் சாட்சி, பொய்வழக்கு என்றார். எதிரி தரப்பில் சாட்சிகள் இல்லை என்று கூறினார்கள்.

7) இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. இவ்வழக்கின் சாட்சிகளின் சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

8) இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், எதிரியின் மீது 379 இ.த.சவின் படி சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு அரசுதரப்பால் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? என்பதே ஆகும்.

9) <u>பிரச்சனைக்குரிய தீர்வு:-</u>

அரசு தரப்பில், கடந்த 03.10.2016ம் தேதி இரவு 09.00 மணியளவில் இவ்வழக்கின் வாதி சீனிவாசன் என்பவர் திருச்சி பைபாஸ் ரோடு சுக்காலியூர் ரவுண்டானா அருகில் ஐவர் ராஜா என்ற பெயரில் உள்ள தனது பஞ்சர் கடைக்கு வெளியே வைத்திருந்த இவ்வழக்கின் வாதிக்கு சொந்தமான சொத்துக்களான சைனா லாரி டயர்-1, அப்பல்லோ லாரி டயர்-2, அப்பல்லோ அமர் லாரி டயர்-1,

ரீபட்டன் டயர்-3 ஆக மொத்தம் 7 டயர்கள் மற்றும் 20 லாரி டியூப்களையும் இவ்வழக்கின் எதிரி சலீம் என்பவர் தனது சுயலாபம் அடையும் பொருட்டு திருடியுள்ளார். எனவே மேற்படி எதிரியின் செய்கையானது சட்டப்பிரிவு 379 இதசவின் கீழ் தண்டிக்கப்பட வேண்டிய குற்றம் புரிந்துள்ளதாக அரசு தரப்பில் சுமத்தப்பட்ட குற்றத்தினை நிரூபிக்கும் முகமாக அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களையும், சான்றாவணங்களையும் மற்றும் இருதரப்பு வாதங்களையும் பின்வருமாறு பரிசீலிக்கப்பட்டது.

10) **இவ்வழக்கில் அ.சா.1 A.சீனிவாசன் நிகழ்வுநிலை புகார்தாரர் மற்றும் பாதிக்கப்பட்ட நபர் ஆவார். அவர் தனது முதல் விசாரணை சாட்சியத்தில்,** "கடந்த 02.10.2016ம் தேதியில் நான் திருச்சி சமயபுரம் கோவிலுக்கு கடையைப் பூட்டிவிட்டு போயிருந்தேன். 04.10.2016ம் தேதியில் மதியம் நான் என் கடைக்கு வந்து பார்த்தபோது என் கடையிலிருந்த 7 லாரி டயர்களையும், 20 டியூப்களையும் காணவில்லை. நான் பக்கத்தில் இருப்பவர்களை விசாரித்தேன். பக்கத்தில் இருந்தவர்கள் பிவிஜி லாரி மேனேஜர் நான் கடையை காலி செய்வதாக சொல்லி ஒருவர் டயரை ஆம்னி வேனில் 03.10.2016ம் தேதியில் ஏற்றிச்சென்றதாக சொன்னார். இது சம்பந்தமாக நான் பசுபதிபாளையம் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார்தான் நான் அளித்தது தான். பின் ஒருவாரம் கழித்து பசுபதிபாளையம் காவல்நிலையத்தில் இருந்து என் டயர் கிடைத்துவிட்டதாக தகவல் சொன்னார். நான் டயர்களை அடையாளம் காட்டினேன். ஆஜர் எதிரிதான் சலீம் அவர்தான் டயர்களை திருடியதாக காவல்நிலையத்தில் சொன்னார்கள். பின்னர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த டயர்களை நான் மனு செய்து புகைப்படம் எடுத்துக்கொண்டு சென்றேன். தற்போது காட்டப்படும் புகைப்படத்திலுள்ள டயர்கள் மற்றும் டியூப்கள் என் கடையில் திருடுபோனதுதான். அதை நான் நீதிமன்றத்தில் பெற்றுச்சென்றேன்." என்று கூறியுள்ளார்.

11) மேற்படி அ.சா.1ன் சாட்சியத்தை ஆராய்கையில், கடந்த 02.10.2016ம் தேதி தனது பஞ்சர் கடையை பூட்டிவிட்டு திருச்சி சமயபுரம் கோவிலுக்கு சென்றுவிட்டு 04.10.2016ம் தேதி திரும்ப வந்து பார்த்தபோது 7

லாரி டயர்கள் மற்றும் 20 டியூப்கள் திருடு போயிருந்தது தெரியவந்து காவல்நிலையத்தில் புகார் அளித்ததும் பின்னர் ஒருவாரம் கழித்து மேற்படி பொருட்கள் கிடைத்துவிட்டதாக காவல்நிலையத்தில் இருந்து வந்த தகவலை கேட்டு காவல்நிலையம் சென்று திருடுபோன தனது டயர்களை அடையாளம் காட்டியதாகவும் அங்கிருந்த எதிரி சலீம் என்பவரை போலிசார் காட்டி அவர்தான் அ.சா.1 ன் கடையில் திருடியவர் என்று சொன்னதும் தெரியவருகிறது.

12) இவ்வழக்கில் எதிரிதான் அ.சா.1 கடையில் வைத்திருந்த லாரிடயர்கள் மற்றும் டியூப்களை திருடினார் என்று நிரூபிப்பதற்கு நேரில் பார்த்த சாட்சிகள் யாரும்இல்லை. ஆனால் எதிரிதான் திருடியதாக போலிசார் குற்றம் சாட்டியுள்ளனர். இந்நிலையில் எதிரி தாமாக முன்வந்து தான் செய்த குற்றத்தை ஒப்புக்கொண்டு தன் முன்னிலையில் ஒப்புதல்வாக்குமூலம் கொடுத்தார் என்று சாட்சியம் அளித்துள்ள அ.சா.3 கருணாநிதி என்பவரது சாட்சியம் இவ்வழக்கினை தீர்மானிப்பதற்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

13) அ.சா.3 கருணாநிதி தனது முதல்விசாரணை சாட்சியத்தில், " கடந்த 05.10.2014 ம் தேதி மதியம் சுமார் 03.30 மணியளவில் சுக்காலியூரில் இருந்தபோது கிழக்கிலிருந்து வந்த ஒரு ஆம்னி வாகனத்தை போலிசார் தேக்கி வாகனத்தை சோதனையிட்டனர். அப்போது அங்கிருந்தவர் சண்டையிட்டுக்கொண்டனர். போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க ஒப்புதல்வாக்குமூலத்திலும், கைப்பற்றுதல்மகசரிலும் கையொப்பம் செய்தேன்." என்று கூறியுள்ளார்.

14) மேற்படி அ.சா.3 ன் சாட்சியத்தினை ஆராய்கையில், கடந்த 05.10.2014 ம் தேதி போலிசார் வாகன சோதனை செய்தபோது ஒரு ஆம்னி வாகனத்தை நிறுத்தி சோதனை செய்ததாகவும் அப்போது அங்கிருந்தவர்கள் சண்டை போட்டதாகவும் போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க ஒப்புதல்வாக்குமூலத்திலும், கைப்பற்றுதல்மகசரிலும் கையொப்பம் செய்ததாக சாட்சியம் அளித்துள்ள நிலையில் எதிரி தானாக முன்வந்து தன்னிச்சையாக தன் முன்னிலையில் ஒப்புதல்வாக்குமூலம் கொடுத்தார் என்றோ அவர் கொடுத்த

ஒப்புதல்வாக்குமூலத்தை போலிசார் தன் முன்னிலையில் பதிவு செய்தார்கள் என்றோ பின்னர் எதிரி அதில் கையொப்பம் செய்தார் என்றோ அதன் அடிப்படையில் தன் முன்னிலையில் போலிசார் டயர்கள் மற்றும் டியூப்களை மகசரில் கைப்பற்றினார்கள் என்றோ குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை. மாறாக போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க ஒப்புதல்வாக்குமூலத்திலும், கைப்பற்றுதல்மகசரிலும் கையொப்பம் செய்ததாக கூறியுள்ளதால் அவரது சாட்சியம் பிறழ்சாட்சியம் ஆக்கப்பட்டு அரசுதரப்பில் குறுக்குவிசாரணை செய்யப்பட்டுள்ளார். எனவே முக்கிய சாட்சியான அ.சா.3 ன் சாட்சியத்தின் மூலம் எதிரியின் மீதான குற்றச்சாட்டானது அரசுதரப்பில் நிரூபிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

15) இவ்வழக்கின் புலன்விசாரணை அதிகாரியான அ.சா.4 உதவி ஆய்வாளர் திரு.கணேசன் இவ்வழக்கினை புலன்விசாரணை செய்து எதிரியின் மீது குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளதாக சாட்சியம் அளித்துள்ள போதிலும் மற்ற சாட்சிகள் எதிரியின் மீதான குற்றச்சாட்டை நிரூபிக்கும் அளவுக்கு சாட்சியம் அளிக்காத நிலையில் புலன்விசாரணை அதிகாரியின் சாட்சியத்தை வைத்து மட்டுமே எதிரியை தண்டிக்க இயலாது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது. எனவே எதிரியின் மீதான குற்றச்சாட்டானது அரசுதரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

16) எனவே மேற்கண்ட விவாதங்கள், சாட்சியங்கள், சான்றாவணங்கள் அடிப்படையில் எதிரிகளின் மீதான 126(2), 296(b), 308(4), 351(3) BNS பிரிவுகளின் படியான குற்றச்சாட்டானது அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

17) முடிவில், மேற்படி அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்தும் மற்றும் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்களில் இருந்தும் எதிரியின் மீதான ச/பி. 379 இ.த.ச வின் படியான

குற்றச்சாட்டானது சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என முடிவு கண்டு சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரியை குவிமுச பிரிவு 248(1)ன் பிரிவின் படி **விடுதலை** செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

18) இவ்வழக்கில் வழக்குச்சொத்தான **ஆர்.பி.எண்.223/2016** ல் கண்டுள்ள **அ.சா.பொ.1** ஆன சைனா லாரி டயர்-1, அப்பல்லோ லாரி டயர்-2, அப்பல்லோ அமர் லாரி டயர்-1, ரீ பட்டன் டயர்-3 ஆக மொத்தம்-7 டயர்கள் மற்றும் **அ.சா.பொ.2** ஆன லாரி டியூப்-20 ஆகியவற்றினை அதன் உரிமையாளர் இடைக்காலப் பொறுப்பில் பெற்றுச்சென்றதை அவரே வைத்துக்கொள்ள உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, இன்று 27.08.2026 ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

BARATH KUMAR Digitally signed by BARATH KUMAR Date: 2026.08.27 19:08:46 +0800

**நீதித்துறை நடுவர் எண்.1,**
**கரூர்.**

**அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகள்:-**

| **அரசுதரப்பு சாட்சிகள்** | **சாட்சிகளின் பெயர்** | **விவரம்** |
|---|---|---|
| அ.சா.1 | A. சீனிவாசன் | புகார்தாரர் |
| அ.சா.2 | K. சீனிவாசன், | பார்வைமகசர் சாட்சி |
| அ.சா.3 | கருணாநிதி | ஒப்புதல்வாக்குமூல சாட்சி |
| அ.சா.4 | திரு. கணேசன், உதவி ஆய்வாளர் | புலன்விசாரணை அதிகாரி |

அரசு தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்கள்:-

| **அரசுதரப்பு சான்றாவணங்கள்** | **சான்றாவணங்களின் விவரம்** | **யார் மூலம் குறியீடு செய்யப்பட்டது** |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | புகார் மனு | அ.சா.1 |
| அ.சா.ஆ.2 | பார்வைமகசர் | அ.சா.2 |
| அ.சா.ஆ.3 | ஒப்புதல்வாக்குமூலத்திலுள்ள கையொப்பம் | அ.சா.3 |
| அ.சா.ஆ.4 | கைப்பற்றுதல்மகசரிலுள்ள கையொப்பம் | அ.சா.3 |
| அ.சா.ஆ.5 | முதல் தகவல் அறிக்கை | அ.சா.4 |
| அ.சா.ஆ.6 | மாதிரிவரைபடம் | அ.சா.4 |
| அ.சா.ஆ.7 | ஒப்புதல்வாக்குமூலத்திலுள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி | அ.சா.4 |
| அ.சா.ஆ.8 | கைப்பற்றுதல்மகசர் | அ.சா.4 |
| அ.சா.ஆ.9 | படிவம் 91 | அ.சா.4 |

அரசுதரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றுப்பொருள்கள்:-

| **அரசுதரப்பு சான்றுப்பொருள்கள்** | **சான்றுப்பொருள்களின் விவரம்** | **யார் மூலம் குறியீடு செய்யப்பட்டது** |
|---|---|---|
| அ.சா.பொ.1 | புகைப்படத்திலுள்ள 7 டயர்கள் | அ.சா.4 |
| அ.சா.பொ.2 | 20 டியூப்கள் | அ.சா.4 |

எதிரி தரப்பில் சாட்சிகள்,சான்றாவணங்கள்,சான்றுப்பொருள்கள்:-

இல்லை

BARATH KUMAR Digitally signed by BARATH KUMAR Date: 2026.08.27 19:08:59 +0800

**நீதித்துறை நடுவர் எண்.1,**
**கரூர்.**

**<u>சிசி.எண்.40/2017, நாள்-27.08.2026</u>**

எதிரி ஆஜர். தீர்ப்பு அவையறிய பகரப்பட்டது.

முடிவில், மேற்படி அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்தும் மற்றும் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்களில் இருந்தும் எதிரியின் மீதான ச/பி. 379 இ.த.ச வின் படியான குற்றச்சாட்டானது சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என முடிவு கண்டு சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரியை குவிமுச பிரிவு.248(1)ன் பிரிவின் கீழ் **விடுதலை** செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

இவ்வழக்கில் வழக்குச்சொத்தான **ஆர்.பி.எண்.223/2016** ல் கண்டுள்ள **அ.சா.பொ.1** ஆன சைனா லாரி டயர்-1, அப்பல்லோ லாரி டயர்-2, அப்பல்லோ அமர் லாரி டயர்-1, ரீ பட்டன் டயர்-3 ஆக மொத்தம்-7 டயர்கள் மற்றும் **அ.சா.பொ.2** ஆன லாரி டியூப்-20 ஆகியவற்றினை அதன் உரிமையாளர் இடைக்காலப் பொறுப்பில் பெற்றுச்சென்றதை அவரே வைத்துக்கொள்ள உத்தரவிடப்படுகிறது.

BARATH KUMAR
Digitally signed by BARATH KUMAR
Date: 2026.08.27 19:09:10 +0800

**நீதித்துறை நடுவர் எண்.1,**
**கரூர்.**